முருகப்பெருமான் துணை

**மகான் விறல்மிண்ட நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.01.2022, சனிக்கிழமை

1. மக்களை காக்கும் மாதவசியே
மகான்கள் துணை கூட்டியே
தேக்கமின்றி ஞானம் அருளி
தெய்வநெறி காட்டும் அரங்கன்
2. அரங்கன் பெருமை தனை கூறி
அகிலமதில் பிலவ கலை திங்கள்
வரங்களென ஈரான திகதி காரிவாரம்
(பிலவ வருடம் தை மாதம் 2ம் நாள், 15.01.2022 சனிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை விறல்மிண்ட நாயனாரும்
அருளுவேன் உலகநலம் பெற
பேசிட ஞானிகள் பூசையாக
பேருலகம் எங்கும் மக்கள் செய்துவர
4. வருகவே நிலைமைகள் மாறும்
வறுமைத் துன்பங்கள் ஓடும்
ஆறுமுக அரங்கன் தருகின்ற
அருளுபதேச வழிகள் தன்னை
5. தன்னையே வழிமொழிந்து வர
தரணியோர்க்கு தவபலம் ஆகவே
இன்னல் எதிர்ப்பு விலகும்
ஏவல் ஓமல் சகலதும் அகலும்
6. அகலவே அவரவர் வாழ்விலும்
அருள் பொருள் வளம் கூடி
சகடை சாலை வழி பாதுகாப்பு
சர்வ பிணி சோடை அனுகா வண்ணம்
7. வண்ணமுடன் ஆயுள் கீர்த்தி
வகைபட திடசிந்தை கொண்டு
எண்ணம் என்றும் குருவை விட்டகலா
இனிதே ஞானவழித் தொடர
8. தொடரவே ஞானிகள் அருளும்
தொய்வின்றி பாதுகாப்புத் தந்து
இடரில்லா பெருவாழ்வு காண்கும்
எல்லா வகையிலும் நன்மை கூடும்
9. கூடவே தேட்டு தனவளமுடன்
குடும்பம் நலமும் காத்து
இடரின்றி வாரிசுகள் கடமையென
எவ்வகையும் சோடை போகா

10. சோடை போகா வாழ்வு நடத்தி
சுத்த நெறி கடைபிடித்துமே
தடைகளை வென்று தேறுவர்
தவராசன் அருள் துணைபடவே

11. துணைபடவே மனிதன் எனும்
தன்நிலை கடந்து மேல்நிலையும்
இணையிலா ஞானிகள் எனும்
ஏற்றமும் தேற்றமும் அடைவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–